## தஞ்சை பர்மா காலனியும் கலைஞரும்...

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் 'நீண்டகாலமாக வசிக்கும் 86 ஆயிரம் பேருக்குப் பட்டா வழங்குவதற்கு' நம் திராவிட மாடல் அரசு முடிவு செய்துள்ளது. இதனைப் பாராட்டி, முகநூலில் பதிவிட்டுள்ள எழுத்தாளர் புலியூர் முருகேசன், அவர் எழுதி வரும் 'பர்மா கௌசா' என்கிற நாவலில் தஞ்சை 'பர்மா காலனி' உருவான வரலாற்றினைப் பதிவு செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, 'தமிழ்நாட்டில் முதன்முதலில் வீடற்றவர்களுக்கு விலையில்லா மனை ஒதுக்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர்தான்' என்கிற குறிப்பினையும் பதிவு செய்துள்ளார்.

அவரது பதிவிலிருந்து..

"பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, பர்மாவிலிருந்து விரட்டப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் தஞ்சை முகாமில் தங்கினார்கள். அப்போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர், அவர்களுக்கு இலவசப் பட்டா வழங்கினார். அதுதான் தமிழ்நாட்டின் 'முதல் இலவசப் பட்டா' வழங்கிய நிகழ்வு.

விளார் செல்லும் வழியில் கிட்டத்தட்ட 35 ஏக்கர் இடம் பொன்னையா என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவருக்கும் இழப்பீட்டுத் தொகையை வழங்கினார், கலைஞர். 60-க்கு 40 அளவில் முதன்முதலாக 20 வீதிகள் அமைக்கப்பட்டு குடிசைகள் போடப்பட்டன. அப்படி உருவானதுதான் 'பர்மா காலனி'. அதுமட்டுமல்லாமல், பர்மா காலனியிலிருந்த நூற்றுக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, அரசு வேலைவாய்ப்பை உண்டாக்கிக் கொடுத்தவரும் கலைஞர்தான்.

இப்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு, இதுவரை 12 லட்சம் இலவசப் பட்டாக்கள் வழங்கியுள்ளது. தற்போது அடுத்த 6 மாதங்களுக்குள் 86,000 பேருக்கு, இலவசப் பட்டா வழங்க இருக்கிறது, தி.மு.க.அரசு என்பது பாராட்டுக்குரியது" எனக் கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### இளைஞர் அணிச் செயலாளரிடம் வாழ்த்து!



எம்.பி.அசோக்குமார்

1993-ஆம் ஆண்டு புதுக்கோட்டை ஊராட்சி மன்றத்திற்கு உட்பட்ட விஸ்வநாத தாஸ் நகரில், ஊராட்சி கிளைச் செயலாளராக இருந்த போது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நகரச் செயலாளர் அண்ணன் நைனா அவர்கள் தலைமையில், சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினர் அண்ணன் த.சந்திரசேகர் அவர்கள் உடனிருந்தார். அப்போது, தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன், அன்றைய தினம் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- எம்.பி.அசோக்குமார், விசுவநாததாஸ் நகர், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வழக்குக் காலமும் அரசியலும்...

1977-ஆம் ஆண்டு, முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தின்போது கலைஞர், பேராசிரியர் உள்பட கழக முன்னோடிகள் கைது செய்யப்பட்டு, 40 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தனர். அந்தப் போராட்டம் தொடர்பாக, 1978-ஆம் ஆண்டில் 135 பேர் மீது பதியப்பட்ட பொய்வழக்கு, 1994-ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த பின்னர், அன்றைய அரசு மீண்டும் உச்சநீதிமன்றம் சென்றது. அங்கும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

# பொய்ப்பெட்டி

49

**கோவி.லெனின்**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# 69% இடஒதுக்கீட்டை உருவாக்கியவர், கலைஞர்!

ஓவியம் : ரவி பேலட்



***'ஜெயலலிதா காப்பாற்றிக் கொடுத்த 69% இடஒதுக்கீட்டை, உச்சநீதிமன்றம் ரத்து செய்தால், தி.மு.க. ஆட்சி இருக்காது. தமிழ்நாட்டில் கலவரம் வெடிக்கும்' என்கிறாரே, பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி?***

காப்பாற்றிக் கொடுத்தவர் என்று ஜெயலலிதாவின் பெயரைச் சொல்லும் அன்புமணி, 69% என்ற அளவில் இடஒதுக்கீட்டை உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர் என்பதை மறந்திருக்க மாட்டார். அதிலும், வன்னிய சமுதாயத்தினர் உள்ளிட்டவர்களை 'மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயம்' எனக் குறிப்பிட்டு, இந்தியாவிலேயே எம்.பி.சி. என்பதை முதன்முதலில் உருவாக்கியவரும் கலைஞர்தான். 50 சதவிகிதமாக இருந்த பிற்படுத்தப்பட்டோருக்கான மொத்த ஒதுக்கீட்டில் பி.சி.க்கு 30%, எம்.பி.சிக்கு 20% என ஒதுக்கியவர் கலைஞர்.

**69% இடஒதுக்கீட்டைக் காத்திட வேண்டும் என்று கேட்டு, போயஸ் கார்டனுக்கு ராமதாஸ் போகவில்லை. கலைஞரின் கோபாலபுரம் இல்லத்திற்குத்தான் வந்தார்.**

அத்துடன் 18% எஸ்.சி., எஸ்.டி.க்கான மொத்த இடஒதுக்கீடு என்றிருந்ததில், 18 சதவிகிதத்தை முழுமையாக எஸ்.சி. பிரிவினருக்கு ஒதுக்கி, 1 சதவிகிதம் பழங்குடியினருக்குத் தனியாக ஒதுக்கியவரும் கலைஞர்தான். அதனால்தான் 30+20+18+1=69 என தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீடு கிடைத்தது. பின்னர், ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது, 'இந்திரா சஹானி வழக்கில்' உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 50%க்கு மேல் இடஒதுக்கீடு இருக்கக்கூடாது என உத்தரவிடப்பட்டது.

அதற்கு முன்பே, தமிழ்நாட்டில் 69% என்கிற அளவிற்கு இடஒதுக்கீட்டினைக் கலைஞர் கொண்டு வந்துவிட்டதால், அதனைக் காப்பாற்றித் தரவேண்டிய நெருக்கடி ஜெயலலிதாவுக்கு உருவானது. அப்போதும்கூட, அவராக முன்வந்து அதனைச் செய்யவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தை அறிவித்தது. அன்புமணியின் அப்பா டாக்டர் ராமதாஸின் பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளும் போராடின. 69% இடஒதுக்கீட்டைக் காத்திட வேண்டும் என்று கேட்டு, போயஸ் கார்டனுக்கு ராமதாஸ் போகவில்லை. கலைஞரின் கோபாலபுரம் இல்லத்திற்குத்தான் வந்தார். அங்கே திருநாவுக்கரசர், லத்தீப் உள்ளிட்டவர்களையும் சேர்த்து, முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கை மேற்கொண்டது ஜெயலலிதா அரசு.

கோபாலபுரத்தில் கலைஞருடன் ராமதாசும் ஒரே வேனில் ஏற்றப்பட்டார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பைக் கண்டு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடம் ஆலோசனை பெற்று, வரைவறிக்கை தயார் செய்து, சட்டதிருத்தத் தீர்மானத்தை ஜெயலலிதா நிறைவேற்றினார்.

ஜி.கே.மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள், அன்றைய பிரதமர் நரசிம்மராவிடம் தமிழ்நாட்டின் நிலையைத் தெரிவித்து, சட்டதிருத்தத்திற்கு ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றனர். அதனால்தான் கலைஞர் கொடுத்த 69% இடஒதுக்கீடு காப்பாற்றப்பட்டது.

அன்புமணிக்கு உண்மையாகவே இடஒதுக்கீட்டில் அக்கறை இருந்தால், சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்ட ஒன்றிய அரசை நோக்கி, 'கலவரம் வெடிக்கும்' என்று பேசும் துணிவு வேண்டும். பேசுவாரா?

**...வினா தொடரும்.**

# கல்வியை ஒழித்துக் கட்டுவதற்கா ஒன்றிய அரசு?

**ர.பிரகாசு**

60 ஆண்டுகளுக்கு முன்புவரை, வேலை வாய்ப்பு - சுகாதாரம் - வறுமைக் குறியீடுகளில் பீகார், உத்தரப் பிரதேசத்தோடு ஒப்பீடு செய்யக்கூடிய நிலையில் இருந்த 'தமிழ்நாடு' இன்றைக்கு இந்தியாவின் முன்னணி மாநிலமாக உயர்ந்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் உதாரணமாக உருவெடுத்திருக்கிறது. அதற்கான விதை, 'நீதிக்கட்சி' காலத்தில் ஊன்றப்பட்டது. பெரியார்- அண்ணா காலத்தில் வளர்க்கப்பட்டது. கலைஞர் காலத்தில் இருந்து அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், மீண்டும் நம்மைக் கல்வியில் இருந்து விலக்கி வைப்பதற்கான அத்தனை சூழ்ச்சிகளும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேக வேகமாக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டை மட்டும் என்று சுருக்கிப் பார்ப்பதை விட, நாடு முழுவதும் இருக்கிற பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட- பழங்குடி மக்களின் கல்வி உரிமைகளைப் பறிப்பது, கல்விக்கான நிதிகளை முடக்குவது, கட்டமைப்புகளைச் சிதைப்பது- மாணவர்களின் கனவுகளை அழிப்பது என பலமுனைத் தாக்குதல்களை, நிகழ்த்திக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டுக்கு 2024-25 நிதியாண்டில் விடுவிக்கப்பட வேண்டிய ரூ.2,152 கோடி இன்னும் விடுவிக்கப்படவில்லை. 'பி.எம்.ஸ்ரீ. பள்ளிகளை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டால் மட்டுமே, இந்நிதியை விடுவிப்போம் என்று மிரட்டுகிறது' ஒன்றிய அரசு. 'மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும், பி.எம்.ஸ்ரீ. பள்ளிகளை ஏற்க மாட்டோம்' என தமிழ்நாடு அரசு தெரிவித்து விட்டது. 40 லட்சம் குழந்தைகளின் கல்வி உரிமையைப் பற்றி கவலைப்படாமல், நிதியை விடுவிக்க மாட்டோம் என்று பிடிவாதமாக இருக்கிறது ஒன்றிய அரசு.

'பல்கலைக்கழகங்களுக்குத் துணை வேந்தர்களை நியமிக்கும் உரிமை மாநில அரசுக்கு இல்லை, ஆளுநருக்குத்தான் உள்ளது' என ஓர் வரைவறிக்கையை யு.ஜி.சி. தயாரித்து, அதை ஏற்றுத்தான் ஆக வேண்டுமென்று நிபந்தனையும் விதிக்கிறார்கள். இது பா.ஜ.க.வின் புதிய கல்விக்கொள்கை, அதனால் வேண்டாம் என்று எதிர்த்து நிற்கிறது, தமிழ்நாடு.

மருத்துவ மேற்படிப்புகளில் 50% மாநில ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் பறித்திருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாட்டு மாணவர்கள் சுமார் 1,200 இடங்களை இழக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

சரி, உயர்கல்வி நிறுவனங்களின் நிலை என்னவாக இருக்கிறது? இந்தியாவில் உள்ள ஐ.ஐ.டி.களில் 2023 - 24 கல்வியாண்டில், முனைவர் படிப்புகளுக்கு மொத்தம் 6 ஆயிரத்து 210 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்து 484 பேர் மட்டுமே எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. மாணவர்கள் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறது, ஒன்றிய அரசு. அதாவது 49.5% இடஒதுக்கீட்டிற்குப் பதிலாக, 40% மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. 590 இடங்களை எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. மாணவர்கள் பறி கொடுத்துள்ளனர்.




மாணவர்களைக் கல்வியில் இருந்து விலக்கி வைப்பதற்கான இத்தகைய சூழ்ச்சிகள் ஒருபக்கம் என்றால், கல்வி நிறுவனங்களுக்கான தரச்சான்று வழங்கும், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் கவுன்சில், லஞ்சம் பெற்றுக் கொண்டு போலி மதிப்பீடுகளை வழங்கி வந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருக்கின்றன. அதன் தலைவராக இருந்த சமரேந்திர நாத் சாஹா உட்பட 10 பேரை, சி.பி.ஐ. கைது செய்திருக்கிறது.

**பா.ஜ.க. ஆட்சியில் மற்ற எதையும் காப்பதை விட கல்வியையும், அதுசார்ந்த கட்டமைப்புகளையும் பாதுகாப்பது என்பதே பெரும்பாடாகி வருகிறது.**


பா.ஜ.க. ஆட்சியில் மற்ற எதையும் காப்பதை விட கல்வியையும், அதுசார்ந்த கட்டமைப்புகளையும் பாதுகாப்பது என்பதே பெரும்பாடாகி வருகிறது. ஆனாலும், பா.ஜ.க.வின் இத்தகைய பாழ்படுத்தும் முயற்சிகள் அனைத்தையும் முதல் ஆளாக அம்பலப்படுத்திக்கொண்டு இருக்கிறது தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் இருந்து கிளம்பும் எதிர்ப்பு, இந்தியா முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசின் உள்நோக்கம், உடனுக்குடன் அம்பலப்பட்டு வருகிறது. இனியும் அம்பலப்படும்!

# திராவிடத்தால் வாழ்கிறோம்

749

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.